DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 93/2023

Miscellaneous :

Sessions : DW 1

Deposition of Witness for

| | |
|---|---|
| Name | பார்த்தீபன் |
| Father / Husband Name | சுந்தரேசன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 28**.05.2025**

**குறுக்கு விசாரணை**

1. வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடைது தான். மசாஆ 4 ல் உள்ள முகவரி என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள எழிலன் என்பவர் சென்னையில் உள்ள ஆதம்பாக்கத்தில் வசித்து வருகிறார். எழிலன் என்பவருக்கு வீடு கட்டுவதற்கு எந்த வகையில் பணம் கொடுத்துள்ளேன் என்பதை மேற்படி எழிலனை விசாரித்தால் தான் தெரியும் என்றால் சரிதான். எழிலன் கொடுத்த இரண்டு காசோலைகளின் எண்களையும் குறிப்பிட்டு பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு எழிலன் 13.01.2023 ம் தேதி அனுப்பியிருந்த வழக்கறிஞர் அறிவிப்பையும் அதற்கு 05.05.2023 ம் தேதி நான் அவருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னுடைய வழக்கறிஞரை தான் கேட்கவேண்டும். எழிலனுக்கு இரண்டு காசோலைகள் எப்போது கொடுத்தேன் என்ற விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. எந்தெந்த காசோலைக்கு stop payment கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு விவரங்கள் அனைத்தையும் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். நான் எழிலனுக்கு கொடுத்த வழக்கு காசோலையை பாலசுப்பரமணியம் என்பவரிடம் கொடுத்து மிஸ்யூஸ் செய்த விவரத்தை எழிலனுக்கு ஏதேனும் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. நான் கணக்கு வைத்திருக்கும் SBI வங்கி OMR கிளை வங்கியில் stop payment அனுப்பிய விவரத்தை கேட்டு வங்கிக்கு ஏதேனும் அறிவிப்பு அனுப்பினேன என்றால் இல்லை. நான் எந்த வங்கியில் stop payment கொடுத்தேன் என்றால் OMR கிளை வங்கியில் கொடுத்தேன். stop payment கொடுத்ததற்கான ஆதாரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. stop payment கொடுத்த விவரத்தை எழிலனுக்கு எழுத்து மூலமாக பதிவு தபால் அனுப்பினேனா என்றால் இல்லை. புகாரில் குறிப்பிட்டபடி புகார் தாரரிடம் ரூபாய் 1 லட்சம் கடன் பெற்றுள்ளேன் என்றால் இல்லை. மேற்படி கடனை தீர்ப்பதற்காகதான் புகார்தாரரின் வழக்கு காசோலையை கொடுத்துள்ளேன் என்றால் இல்லை.

வழக்கிற்காக காண்ரக்டர் எழிலனிடம் நான் காசோலையை கொடுத்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. stop payment கொடுத்தாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 13.01.2023 ம் தேதி எழிலன் எனக்கு நோட்டீஸ் கொடுக்கும்போது மேல்மருவத்தூரில் உள்ள எனது வீடு முதல் தளம் கட்டி முடிக்காமல் இருந்தது என்றால் சரிதான். 13.01.2023 ம் தேதிக்கு பிறகு எழிலன் எனக்கு கட்டுமானம் செய்து தரவில்லை என்றால் சரிதான். 2018 ம் வருடம் எழிலன் பில்டிங்கை கட்டாமல் விட்டு சென்றார் என்றால் சரிதான். நான் எழிலனுக்கு எந்த பணமும் அதன் பிறகு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி வீட்டை கொத்தனார் வைத்து சிறு சிறு வேலையை செய்து முடித்தேன்.

4. எழிலனிடம் கொடுத்த இரண்டு செக் குறித்து காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. stop payment மட்டும் தான் வங்கிக்கு கொடுத்தேன். தரைத்தளத்தில் உள்ள சிறு வேலைபாடுகளை கொத்தனார் வைத்து முடித்தது போலவே முதல் தளத்தில் உள்ள வேலைபாடுகளையும் 2023 ம் வருடம் ஆகஸ்டு மாதம் கொத்தனாரை வைத்து முடித்தேன். காசோலை திருப்பப்பட்டதை மேல்மருவத்தூர் வங்கிக்கு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. நான் கட்டும் வீட்டிற்கு இரண்டாவது வீடு புகார்தாரர் வீடு ஆகும். நான் கடைகால் எடுக்கும் போது புகார்தாரரை அழைத்தேனா என்றால் அழைத்தேன்.

5. நான் கட்டிடம் கட்டும்போது புகார்தாரர் எனக்கு தேவையான தண்ணீரை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் கட்டிய வீட்டின் தரைதளத்தின் கிரகபிரவேசத்திற்கு புகார்தாரரை அழைத்தேனா என்றால் மனஸ்தாபத்தின் காரணமாக அழைக்கவில்லை. எனக்கும் அவருக்கும் மனஸ்தாபம் இல்லை என்றாலும் இந்த வழக்கில் தப்பிப்பதற்காக பொய்யாக 2018 ம் வருடத்தில் இருந்து மனஸ்தாபம் ஏற்பட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் எழிலனுக்கு ஆதரவாக பேசியதால் எனக்கும் அவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. இந்த வழக்கில் 05.04.2023 மற்றும் 06.04.2023 அன்று எனக்கு பதிவஞ்சல் மசாஆ 4 ன் மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

6. வழக்கறிஞர் அறிவிப்பு வந்தும் அதனை நான் கோரி பெறவில்லை என்றால் சரியல்ல. அறிவிப்பு வந்தது தெரியும் என்றாலும் அதற்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. புகார்தாரர் புகாரில் குறிப்பிட்டுள்ளபடி மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் நான் குற்றம் புரிந்துள்ளேன் என்றாலும் புகார் அனுமதித்து எனக்கு சட்டப்படி தண்டணை அளிக்க வேண்டும் என்றாலும் சரியல்ல.